(ஒன்பதாவது பாராளுமன்றம் - இரண்டாவது கூட்டத்தொடர்)

இல. **36.]**

# பாராளுமன்றக் கூட்ட அறிக்கை

2022 யூன் 07 செவ்வாய்க்கிழமை மு.ப. 10.00 மணிக்கு

## சமூகமளித்தோர்:

**கௌரவ மஹிந்த யாப்பா அபேவர்தன,** சபாநாயகர்

**கௌரவ அஜித் ராஜபக்ஷ,** பிரதிச் சபாநாயகரும் குழுக்களின் தவிசாளரும்

**கௌரவ அங்கஜன் இராமநாதன்**, குழுக்களின் பிரதித் தவிசாளர்

---

**கௌரவ ரணில் விக்கிரமசிங்க,** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்

**கௌரவ மஹிந்த அமரவீர,** கமத்தொழில் அமைச்சர் மற்றும் வனசீவராசிகள் மற்றும் வனவளங்கள் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ நஸீர் அஹமட்,** சுற்றாடல் அமைச்சர்

**கௌரவ தினேஷ் குணவர்தன,** பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் மற்றும் பாராளுமன்றச் சபை முதல்வர்

**கௌரவ (கலாநிதி) பந்துல குணவர்தன,** போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சர் மற்றும் வெகுசன ஊடக அமைச்சர்

**கௌரவ நிமல் சிறிபால த சில்வா,** துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவைகள் அமைச்சர்

**கௌரவ டக்ளஸ் தேவானந்தா,** கடற்றொழில் அமைச்சர்

**கௌரவ மனுஷ நாணாயக்கார,** தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர்

**கௌரவ (பேராசிரியர்) ஜீ.எல். பீரிஸ்,** வெளிநாட்டலுவல்கள் அமைச்சர்

**கௌரவ நலின் பிரனாந்து,** வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அமைச்சர்

**கௌரவ ஹரின் பிரனாந்து,** சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) சுசில் பிரேமஜயந்த,** கல்வி அமைச்சர்

**கௌரவ பிரசன்ன ரணதுங்க,** நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர் மற்றும் அரசாங்கக் கட்சி முதற்கோலாசான்

**கௌரவ ரொசான் ரணசிங்க,** நீர்ப்பாசன அமைச்சர் மற்றும் விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் அமைச்சர்

**கௌரவ கெஹெலிய ரம்புக்வெல்ல,** சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்

**கௌரவ (கலாநிதி) விஜயதாச ராஜபக்ஷ,** நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சர்

**கௌரவ கஞ்சன விஜேசேகர,** மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சர்

---

கௌரவ செல்வம் அடைக்கலநாதன்

கௌரவ ஏ. எல். எம். அதாஉல்லா

கௌரவ (திருமதி) தலதா அதுகோரல

கௌரவ சம்பத் அதுகோரல

கௌரவ திஸ்ஸ அத்தநாயக்க

கௌரவ ஹெக்டர் அப்புஹாமி

கௌரவ ரோஹித அபேகுணவர்தன

கௌரவ அஸோக அபேசிங்ஹ

கௌரவ (கலாநிதி) (திருமதி) ஹரினி அமரசூரிய

கௌரவ துஷார இந்துனில் அமரசேன

கௌரவ மாயாதுன்ன சிந்தக அமல்

கௌரவ தவராஜா கலை அரசன்

கௌரவ லசந்த அலகியவன்ன

கௌரவ ஜே.சீ. அலவத்துவல

கௌரவ டலஸ் அழகப்பெரும

கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே

கௌரவ திஸகுட்டி ஆரச்சி

கௌரவ யூ.கே. சுமித் உடுகும்புர

கௌரவ எம். உதயகுமார்

கௌரவ (மேஜர்) பிரதீப் உந்துகொட

கௌரவ சஞ்ஜீவ எதிரிமான்ன

கௌரவ அகில எல்லாவல

கௌரவ லலித் எல்லாவல

கௌரவ செல்வராசா கஜேந்திரன்

கௌரவ கோவிந்தன் கருணாகரம்

கௌரவ கயந்த கருணாதிலக்க

கௌரவ சாகர காரியவசம்

கௌரவ பைஸால் காசிம்

கௌரவ லக்ஷ்மன் கிரிஎல்ல

கௌரவ உதயன கிரிந்திகொட

கௌரவ லலித் வர்ண குமார

கௌரவ கெவிந்து குமாரதுங்க

கௌரவ (திருமதி) கீதா சமன்மலீ குமாரசிங்ஹ

கௌரவ கே.பி.எஸ். குமாரசிறி

கௌரவ அ. அரவிந்த் குமார்

கௌரவ வேலு குமார்

கௌரவ கருணாதாஸ கொடிதுவக்கு

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட

கௌரவ மனோ கணேசன்

கௌரவ சிறிபால கமலத்

கௌரவ உதய கம்மன்பில

கௌரவ (டாக்டர்) உபுல் கலப்பத்தி

கௌரவ உதயகாந்த குணதிலக்க

கௌரவ (திருமதி) கோகிலா குணவர்தன

கௌரவ யதாமிணீ குணவர்தன

கௌரவ (கலாநிதி) நாலக கொடஹேவா

கௌரவ சிவநேசதுரை சந்திரகாந்தன்

கௌரவ எஸ்.எம். சந்திரசேன

கௌரவ டி.வீ. சானக

கௌரவ சிசிர ஜயகொடி

கௌரவ மிலான் ஜயதிலக்க

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ அநுராத ஜயரத்ன

கௌரவ பியங்கர ஜயரத்ன

கௌரவ (பேராசிரியர்) சன்ன ஜயசுமன

கௌரவ தயாசிறி ஜயசேக்கர

கௌரவ எம். எஸ். தௌபீக்

கௌரவ குலசிங்கம் திலீபன்

கௌரவ பிரமித்த பண்டார தென்னகோன்

கௌரவ ஜீவன் தொண்டமான்

கௌரவ சாமர சம்பத் தசநாயக

கௌரவ பியல் நிசாந்த த சில்வா

கௌரவ மொஹான் பிரியதர்ஷன த சில்வா

கௌரவ ஷான் விஜயலால் த சில்வா

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ (திருமதி) மஞ்சுலா திசாநாயக

கௌரவ மயந்த திசாநாயக்க

கௌரவ றோஹண திஸாநாயக்க

கௌரவ சாரதீ துஷ்மந்த

கௌரவ (மேஜர்) சுதர்ஷன தெனிபிடிய

கௌரவ இசுரு தொடன்கொட

கௌரவ பிரேம்நாத் சி. தொலவத்த

**கௌரவ டப்ளியூ.எச்.எம். தர்மசேன**

**கௌரவ (டாக்டர்) கயாஷான் நவனந்த**

**கௌரவ அசங்க நவரத்ன**

**கௌரவ வாசுதேவ நாணாயக்கார**

**கௌரவ சாள்ஸ் நிர்மலநாதன்**

**கௌரவ சனத் நிசாந்த**

**கௌரவ கிங்ஸ் நெல்சன்**

**கௌரவ புத்திக பத்திறண**

**கௌரவ அனுப பஸ்குவல்**

**கௌரவ நிமல் பியதிஸ்ஸ**

**கௌரவ ஜகத் புஷ்பகுமார**

**கௌரவ டிலான் பெரேரா**

**கௌரவ நிரோஷன் பெரேரா**

**கௌரவ கே. சுஜித் சஞ்ஜய பெரேரா**

**கௌரவ ஜீ.ஜீ. பொன்னம்பலம்**

**கௌரவ அருந்திக்க பர்னாந்து**

**கௌரவ (டாக்டர்) (திருமதி) சுதர்ஷினி பர்னாந்துபுள்ளே**

**கௌரவ அசோக்க பிரியந்த**

**கௌரவ (திருமதி) முதிதா பிரிஸான்தி**

**கௌரவ சஜித் பிரேமதாச,** பாராளுமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

**கௌரவ உத்திக பிரேமரத்ன**

**கௌரவ ரோஹண பண்டார**

**கௌரவ ஆர். எம். ரஞ்சித் மத்தும பண்டார**

**கௌரவ (பேராசிரியர்) ரஞ்சித் பண்டார**

**கௌரவ சாந்த பண்டார**

**கௌரவ தாரக்க பாலசூரிய**

**கௌரவ சுதத் மஞ்சுல**

**கௌரவ எஸ்.எம். மரிக்கார்**

**கௌரவ கே. காதர் மஸ்தான்**

**கௌரவ இம்ரான் மஹ்ரூப்**

**கௌரவ இம்தியாஸ் பாகிர் மாகார்**

**கௌரவ அஜித் மான்னப்பெரும**

**கௌரவ எஸ். எம். எம். முஸ்ஸாரப்**

**கௌரவ மொஹமட் முஸம்மில்**

**கௌரவ அநுர பிரியதர்ஷன யாபா**

**கௌரவ வசந்த யாப்பாபண்டார**

கௌரவ பாட்டளி சம்பிக ரணவக்க

கௌரவ பிரசன்ன ரணவீர

கௌரவ (வண.) அதுரலியே ரதன தேரர்

கௌரவ பீ.வை.ஜீ. ரத்னசேக்கர

கௌரவ குமாரசிறி ரத்னாயக்க

கௌரவ சீ.பீ. ரத்நாயக்க

கௌரவ இஷாக் ரஹுமான்

கௌரவ முஜிபுர் ரஹுமான்

கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன்

கௌரவ ஹர்ஷண ராஜகருணா

கௌரவ குணதிலக ராஜபக்ஷ

கௌரவ சமல் ராஜபக்ஷ

கௌரவ (டாக்டர்) திலக் ராஜபக்ஷ

கௌரவ நாமல் ராஜபக்ஷ

கௌரவ மஹிந்த ராஜபக்ஷ

கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ

கௌரவ சஷீந்திர ராஜபக்ஷ

கௌரவ (கலாநிதி) வீ. இராதாகிருஷ்ணன்

கௌரவ எம். ராமேஷ்வரன்

கௌரவ சாணக்கியன் ராஜபுத்திரன் இராசமாணிக்கம்

கௌரவ நிமல் லான்சா

கௌரவ வருண லியனகே

கௌரவ காமினி லொக்குகே

கௌரவ ஜானக வக்கும்புர

கௌரவ காமினி வலேபொட

கௌரவ இரான் விக்கிரமரத்ன

கௌரவ (திருமதி) ராஜிகா விக்கிரமசிங்ஹ

கௌரவ க.வி. விக்னேஸ்வரன்

கௌரவ (திருமதி) ரோஹினீ குமாரி விஜேரத்ன

கௌரவ சமிந்த விஜேசிறி

கௌரவ எம். டப்ளியு. டீ. சஹன் பிரதீப் விதான

கௌரவ மதுர விதானகே

கௌரவ பெசில் ரோஹண ராஜபக்ஷ

கௌரவ ஹேஷா விதானகே

கௌரவ (பேராசிரியர்) திஸ்ஸ விதாரண

கௌரவ ச. வியாழேந்திரன்

**கௌரவ சந்திம வீரக்கொடி**

**கௌரவ (சனாதிபதி சட்டத்தரணி) ஜயந்த வீரசிங்க**

**கௌரவ டீ. வீரசிங்க**

**கௌரவ வீரசுமன வீரசிங்ஹ**

**கௌரவ (கலாநிதி) சரத் வீரசேக்கர**

**கௌரவ சிவஞானம் சிறீதரன்**

**கௌரவ எம். யூ. எம். அலி சப்ரி**

**கௌரவ ஜகத் சமரவிக்ரம**

**கௌரவ ஜயந்த சமரவீர**

**கௌரவ ராஜவரோதயம் சம்பந்தன்**

**கௌரவ தருமலிங்கம் சித்தார்தன்**

**கௌரவ மைத்ரீபால சிறிசேன**

**கௌரவ எம்.ஏ. சுமந்திரன்**

**கௌரவ ஜகத் குமார சுமித்ராரச்சி**

**கௌரவ வடிவேல் சுரேஷ்**

**கௌரவ ஜோன் செனவிரத்ன**

**கௌரவ (டாக்டர்) ராஜித சேனாரத்ன**

**கௌரவ செஹான் சேமசிங்க**

**கௌரவ ரஊப் ஹகீம்**

**கௌரவ எச்.எம்.எம். ஹரீஸ்**

**கௌரவ அப்துல் ஹலீம்**

**கௌரவ இந்திக அனுருத்த ஹேரத்**

**கௌரவ கனக ஹேரத்**

**கௌரவ (பேராசிரியர்) சரித்த ஹேரத்**

**கௌரவ ஜயரத்ன ஹேரத்**

**கௌரவ டீ. பி. ஹேரத்**

**கௌரவ விஜித ஹேரத்**

**கௌரவ சமன்பிரிய ஹேரத்**

**கௌரவ மர்ஜான் பளீல்**

**கௌரவ பீல்ட் மார்ஷல் சரத் பொன்சேகா**

திரு. தம்மிக தசநாயக்க, பாராளுமன்றச் செயலாளர் நாயகம்

திருமதி குஷானி ரோஹனதீர, பணியாட்டொகுதிப் பிரதானியும் பிரதிப் பாராளுமன்றச் செயலாளர் நாயகமும்

திரு. டிக்கிரி கே. ஜயதிலக, உதவிச் செயலாளர் நாயகம்

**ஒத்திவைப்பின் பிரகாரம் பாராளுமன்றம் கூடியது. சபாநாயகர் தலைமை தாங்கினார்.**

1. **சனாதிபதியின் செய்திகள்:** சனாதிபதியிடமிருந்து கிடைத்த பின்வரும் செய்தியை சபாநாயகர் வாசித்தார்:—

ශ්‍රී ලංකා ජනාධිපති
இலங்கை சனாதிபதி
President of Sri Lanka

எனது இல: பிஎஸ்/சிஎஸ்ஏ/00/1/12/7

2022 மே மாதம் 17 ஆந் திகதி

**மாண்புமிகு மஹிந்த யாப்பா அபேவர்த்தன அவர்கள்**
சபாநாயகர்
இலங்கை பாராளுமன்றம்

மாண்புமிகு சபாநாயகர் அவர்களே

**(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம்**

(40 ஆம் அத்தியாயமான) பொதுமக்கள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டத்தின் 12 ஆம் பிரிவினால் எனக்குரித்தாக்கப்பட்டுள்ள தத்துவங்களின் பயனைக்கொண்டு, மக்களிடையே அமைதியைப் பேணுவதற்கான தேவையைக் கருத்திற்கொண்டு, முதலாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்பட்டுள்ள படைதாங்கு சேவைகளின் சகல உறுப்பினர்களும் அதன் இரண்டாம் அட்டவணையில் நிச்சயித்துக் குறிப்பிடப்படும் பிரதேசங்களில் மக்களிடையே அமைதியைப் பேணுவதற்காக அழைக்கப்படுகின்றனர் என ஆணையிடப்பட்டுள்ளது.

அதற்கமைய, மேற்படி கட்டளைச் சட்டத்தின் 21(2) ஆம் பிரிவுடன் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய 2(3) பிரிவுக்கமைய அதனை இத்தால் பாராளுமன்றத்துக்கு அறிவித்தல் விடுக்கின்றேன்.

இங்ஙனம் - அன்புள்ள

**கோட்டாபய ராஜபக்ஷ**

ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජය
இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு
Democratic Socialist Republic of Sri Lanka

**2. சபாநாயகரின் அறிவித்தல்கள்**: சபாநாயகர் பின்வருமாறு அறிவித்தல்கள் விடுத்தார்:—

**I**

“அரசியலமைப்பின் 121(1) ஆம் உறுப்புரையின் பிரகாரம், உயர் நீதிமன்றத்திற்குச் சமர்ப்பிக்கப்பட்ட ‘அரசியலமைப்புக்கான இருபத்தோராம் திருத்தம்’ எனும் தனியார் சட்டமூலம் தொடர்பாக ஐந்து மனுக்களின் பிரதிகளும் “அரசியலமைப்புக்கான இருபத்தியிரண்டாவது திருத்தம்” எனும் தனியார் சட்டமூலம் தொடர்பாக நான்கு மனுக்களின் பிரதிகளும் எனக்குக் கிடைத்துள்ளதென்பதை பாராளுமன்றத்திற்கு அறிவிக்க விரும்புகின்றேன்.”

**II**

“பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 (1) இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 மே 18 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணை என்பனவற்றிற்கு அமைவாக, ஒன்பதாவது பாராளுமன்றத்தின் இரண்டாவது கூட்டத்தொடரில் மின்சக்தி மற்றும் வலுசக்தி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழுவில் பணியாற்றுவதற்காக பின்வரும் உறுப்பினர்கள் தெரிவுக்குழுவினால் பெயர்குறித்து நியமிக்கப்பட்டுள்ளனர் என்பதை அறிவித்துக்கொள்ள விரும்புகின்றேன்:—

கௌரவ (திருமதி) பவித்ராதேவி வன்னிஆரச்சி

கௌரவ துமிந்த திசாநாயக்க

கௌரவ கபீர் ஹஷீம்

கௌரவ நலீன் பண்டார ஜயமஹ

கௌரவ நாலக பண்டார கோட்டேகொட”

**3. பத்திரங்கள் சமர்ப்பிக்கப்படல்:** (1) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம்—

இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம் 2020 ஆம் நிதி ஆண்டிற்கான கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் ஐந்தாவது தொகுதியின் IV மற்றும் V ஆம் பகுதிகளையும் மற்றும் ஆறாம் தொகுதியின் VIII, IX மற்றும் X ஆம் தொகுதிகளையும் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(2) சபாநாயகர், இலங்கைச் சனநாயகச் சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையின் பிரகாரம், கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கையின் எட்டாவது தொகுதியினது —

(i) இலங்கையின் தொற்றாத நாட்பட்ட நோய்களைத் தடுத்தல் மற்றும் கட்டுப்படுத்தல் செயல்பாடுகளை ஒழுங்குறுத்தல் தொடர்பான அறிக்கையின் - VI ஆம் பகுதி; மற்றும்

(ii) இலங்கையின் கடற்கரை மற்றும் கடல்சார் தேசிய பூங்காக்கள் பாதுகாப்பு தொடர்பிலான செயலாற்றுகை அறிக்கையின் - VII ஆம் பகுதி

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனவும் அச்சிடப்பட வேண்டுமெனவும் கட்டளையாயிற்று.

(3) பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்—

(i) 2022 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க குறைநிரப்பு மதிப்பீடு; மற்றும்

(ii) 2017 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, வெளிநாட்டுச் செலாவணிச் சட்டத்தின் 7 ஆம் பிரிவுடன் வாசிக்கப்பட வேண்டிய 29 ஆம் பிரிவின் கீழ் நிதி அமைச்சரினால் ஆக்கப்பட்டு 2022 மார்ச் 28 ஆம் திகதிய 2273/06 ஆம் இலக்க வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட ஒழுங்குவிதிகள்

ஆகியவற்றைச் சமர்ப்பித்து குறைநிரப்பு மதிப்பீடு மற்றும் ஒழுங்குவிதிகள் அரசாங்க நிதி பற்றிய குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட வேண்டுமெனப் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(4) பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர்—

(i) 1974 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினாலும், 1988 ஆம் ஆண்டின் 83 ஆம் இலக்க சுங்க (திருத்தச்) சட்டத்தினாலும் திருத்தப்பட்டவாறான சுங்கக் கட்டளைச் சட்டத்தின் (235 ஆம் அத்தியாயமான) 19(அ) ஆம் பிரிவின் கீழ் செலுத்த வேண்டிய சுங்கத் தீர்வை தொடர்பில் நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 மார்ச் 31 ஆம் திகதிய 2273/74 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கட்டளை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டின் 30 ஆம் இலக்க, ஒதுக்கீட்டுச் சட்டத்தின் 6(1) ஆம் பிரிவின் கீழ் 2022.04.01 முதல் 2022.04.30 வரையுள்ளவாறு தேசிய வரவு செலவுத் திட்டத் திணைக்களத்தின் செலவினத் தலைப்பு இலக்கம் 240 இன் கீழ் குறைநிரப்பு உதவிச் சேவைகள் மற்றும் அவசர தேவைப்பாடுகள் பொறுப்புக் கருத்திட்டத்தின் மூலம் செய்யப்பட்ட குறைநிரப்பு ஒதுக்கீடுகள் தொடர்பான குறிப்பு

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி பத்திரங்கள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(5) நகர அபிவிருத்தி மற்றும் வீடமைப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான கிராமிய வீடமைப்பு மற்றும் நிர்மாணத்துறை, கட்டிடப் பொருட் கைத்தொழில் மேம்பாட்டு இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகை அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(6) கல்வி அமைச்சர் —

(i) 2021 ஆம் ஆண்டுக்கான மகளிர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி, முன்பள்ளி மற்றும் ஆரம்பக் கல்வி, கல்விச் சேவைகள் மற்றும் பாடசாலைகள் உட்கட்டமைப்பு வசதிகள் இராஜாங்க அமைச்சின் செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான அறநெறிப் பாடசாலைகள், பிரிவெனாக்கள் மற்றும் பிக்குமார் கல்வி இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் ***சபாபீடத்திலிடப்பட*** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(7) சுகாதார அமைச்சர் மற்றும் நீர் வழங்கல் அமைச்சர்—

(i) 2021 ஆம் ஆண்டுக்கான நீர்வழங்கல் அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை; மற்றும்

(ii) 2021 ஆம் ஆண்டுக்கான கிராமிய மற்றும் பிரதேச குடிநீர் வழங்கல் கருத்திட்டங்கள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கை

ஆகியவற்றைச் சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கைகள் **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

(8) தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அமைச்சர், 2021 ஆம் ஆண்டுக்கான வெளிநாட்டு வேலைவாய்ப்பு மேம்பாடு மற்றும் சந்தை பல்வகைப்படுத்தல் இராஜாங்க அமைச்சின் வருடாந்த செயலாற்றுகை அறிக்கையை சமர்ப்பித்தார்.

மேற்படி அறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**4. குழுக்களின் அறிக்கைகள் சமர்ப்பித்தல்: :** அரசாங்க நிதி பற்றிய குழுவின் தவிசாளர் கௌரவ அநுர பிரியதர்ஷன யாப்பா அக்குழுவிற்கு ஆற்றுப்படுத்தப்பட்ட —

(i) 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழாள ஒழுங்குவிதிகள்; மற்றும்

(ii) (அத்தியாயம் 417) உள்நாட்டு திறைசேரி உண்டியல்கள் கட்டளைச் சட்டத்தின் கீழான தீர்மானம்

தொடர்பிலான அக்குழுவின் அறிக்கையைச் சமர்ப்பித்தார்.

அவ்வறிக்கை **சபாபீடத்திலிடப்பட** வேண்டுமெனக் கட்டளையாயிற்று.

**5. பொது மனுக்கள் சமர்ப்பித்தல்:**

(1) நாவலபிட்டிய, பலன்தொட்ட, நவசாந்த குடியேற்றம், இல. 41/ஏ இல் வதியும் திரு. டி.எம். அநுர தனசேக்கரவினது 2022.02.27 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ மஹிந்தானந்த அலுத்கமகே சமர்ப்பித்தார்.

(2) கம்பஹா, முதுன்கொட, இல. 329/ஏ யில் வதியும் திருமதி எம்.கே.எம். தர்மசிறியினது 2022.03.23 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ அஜித் மான்னப்பெரும சமர்ப்பித்தார்.

(3) மஹவ, வெலியாய – போகஸ் சந்தி, ரன்தெனிகம வீதி எனும் முகவரியில் வதியும் திரு. டப்ளியூ.ஐ.எம். ஜயதிலகவினது 2021.11.29 ஆம் திகதியிடப்பட்ட மனுவை கௌரவ (திருமதி) மஞ்சுளா திசாநாயக்க சமர்ப்பித்தார்.

மேற்படி மனுக்கள் பாராளுமன்ற நிலையியற் கட்டளை 30(10) இன் கீழ் பொது மனுக்கள் பற்றிய குழுவுக்கு ஆற்றுப்படுத்தப்பட்டன.

**6. பாராளுமன்ற அமர்வு:** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 8 இன் ஏற்பாடுகளினாலும், 2022 சனவரி 19 ஆம் திகதி பாராளுமன்றத்தினால் ஏற்றுக்கொள்ளப்பட்ட பிரேரணையினாலும் தடைபெறாமல், இன்றைய தினம் சபை அமர்வு நேரங்கள் மு.ப. 10.00 மணி முதல் பி.ப. 12.30 மணி வரையும் பி.ப. 1.30 மணி முதல் பி.ப. 5.30 மணி வரையும் இருக்குமாக. மு.ப. 11.30 மணிக்கு 8(5) ஆம் இலக்க பாராளுமன்ற நிலையியற் கட்டளை தொழிற்படுமாக. பி.ப. 5.30 மணிக்கு சபாநாயகர் பாராளுமன்றத்தை வினாவின்றி ஒத்திவைப்பாராக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**7. அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல.1):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— 2022 யூன் மாதம் 02 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்களின் பெயர்கள்,

1. நிதி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசிய கொள்கைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

2. நீதி அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “நீதி, சிறைச்சாலைகள் அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

3. தொழில் அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “தொழில் மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

4. துறைமுகங்கள் மற்றும் கப்பற்றுறை பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “துறைமுகங்கள், கப்பற்றுறை மற்றும் விமான சேவை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

5. இளைஞர் மற்றும் விளையாட்டுத்துறை அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகாரங்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்; மற்றும்

6. வர்த்தக அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு “வர்த்தக, வாணிப மற்றும் உணவுப் பாதுகாப்பு அலுவல்கள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு” எனவும்;

மீளப் பெயரிடப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**8. அமைச்சுசார் ஆலோசனைக் குழுக்கள் (இல. 2):** பாராளுமன்றச் சபை முதல்வர் பின்வருமாறு பிரேரித்தார்,— பாராளுமன்ற நிலையியற் கட்டளை 112 (1) இன் ஏற்பாடுகள் மற்றும் 2022 யூன் 02 ஆம் திகதி தெரிவுக் குழுவினால் தீர்மானிக்கப்பட்டவாறு பின்வரும் அமைச்சுசார் ஆலோசைனக் குழுக்கள் பெயர் குறிப்பிட்டு நியமிக்கப்படுமாக:—

1. போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

2. சுற்றுலாத்துறை மற்றும் காணி பற்றிய அமைச்சுசார் ஆலோசனைக் குழு

ஒவ்வொரு ஆலோசனைக் குழுவிற்கும் ஆற்றுப்படுத்தப்பட்ட விடயம் தொடர்பில் ஆராய்ந்து அறிக்கை சமர்ப்பிப்பதற்காக, ஒவ்வோர் அமைச்சுசார் ஆலோசனைக் குழுவும், உரிய விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சரவை அமைச்சர் அதன் தவிசாளராகவும், அதன் இராஜாங்க அமைச்சர் மற்றும் பிரதி அமைச்சர் உட்பட தெரிவுக் குழுவினால் பெயர்குறிப்பிடப்படும் வேறு ஐந்து (5) பாராளுமன்ற உறுப்பினர்களைக் கொண்டிருக்குமாக.

ஒவ்வொரு அமைச்சுசார் ஆலோசனைக் குழுவினதும் கூட்ட நடப்பெண் மூன்று (3) உறுப்பினர்களாக இருத்தல் வேண்டும்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**9. சட்டமூலத்தை மீளப்பெறுவதற்கான அனுமதி:** “இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் அரசியலமைப்பைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்” எனும் 2022 மே 17 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்ட சட்டமூலத்தை மீளப்பெறுவதற்காக அனுமதி வழங்கப்படுமாக என பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**10. இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்:** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,— இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் கீழ் ஒழுங்குவிதிகள்,— 1985 ஆம் ஆண்டின் 48 ஆம் இலக்கச்

சட்டத்தின் மூலமும் 1987 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் மூலமும் திருத்தப்பட்டவாறான, 1969 ஆம் ஆண்டின் 1 ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டு) சட்டத்தின் 4(1), 6 மற்றும் 14 ஆம் பிரிவுகளுடனும் சேர்த்து வாசிக்கப்பட வேண்டிய அச்சட்டத்தின் 20 ஆம் பிரிவின் கீழ், நிதி அமைச்சரால் விதிக்கப்பட்டு, 2022 ஏப்ரல் 09 ஆம் திகதிய 2274/42 ஆம் இலக்க அதிவிசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்டதும் 2022.05.06 ஆம் திகதி சமர்ப்பிக்கப்பட்டதுமான ஒழுங்குவிதிகள் அங்கீகரிக்கப்படுமாக.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**11. உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் கீழ் தீர்மானம்:** பிரதம அமைச்சர் மற்றும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சர் சார்பாக பொது நிர்வாக, உள்நாட்டலுவல்கள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சர் சமர்ப்பித்த பிரேரணை,—இதற்கு முன்னரான தீர்மானங்களின் மூலம் அதிகாரமளிக்கப்பட்ட தொகைக்கு மேலதிகமாக ரூபா 1,000,000,000,000 ஐ விஞ்சாத தொகையொன்றை இலங்கையில் இலங்கை அரசாங்கத்தின் திறைசேரி உண்டியல்களை வெளியிடுவதன் மூலம் கடனைப் பெறுவதற்கும், அதன் பொருட்டு (417 ஆவது அத்தியாயம்) உள்நாட்டு திறைசேரி உண்டியல் கட்டளைச் சட்டத்தின் 2(1) ஆம் பிரிவின் கீழ் தேவையான சகல அதிகாரங்களையும் நிதி, பொருளாதார உறுதிப்பாடு மற்றும் தேசியக் கொள்கைகள் அமைச்சருக்கு வழங்குவதற்கும் இப்பாராளுமன்றம் தீர்மானிக்கிறது.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

**12. ஒத்திவைப்பு (பொருளாதார நெருக்கடியை வெற்றிகொள்வதற்கு மாண்புமிகு பிரதம அமைச்சரால் ஆரம்பிக்கப்பட்ட திட்டத்துக்கு ஆதரவளித்தல்) :** "இப்பாராளுமன்றம் இப்பொழுது ஒத்திவைக்கப்படுமாக" என பாராளுமன்றச் சபை முதல்வர் பிரேரித்தார்.

பிரேரணை சபைக்கு எடுத்தியம்பப்பெற்று விவாதிக்கப்பட்டது.

(பி.ப. 12.42 மணிக்கு பிரதிச் சபாநாயகர் தலைமை தாங்கினார்.)

"கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்குவாராக" என கௌரவ (கலாநிதி) சுரேன் ராகவன் முன்மொழிய கௌரவ (திருமதி) தலதா அதுகோரல அதனை வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 2.02 மணிக்கு கௌரவ வசந்த யாப்பாபண்டார தலைமை தாங்கினார்.)

"கௌரவ ஜே.சீ. அலவத்துவல தலைமை தாங்குவாராக" என கௌரவ முஜிபுர் ரஹுமான் முன்மொழிய கௌரவ கிங்ஸ் நெல்சன் அதனை வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 3.58 மணிக்கு கௌரவ ஜே.சீ. அலவத்துவல தலைமை தாங்கினார்.)

"கௌரவ வேலு குமார் தலைமை தாங்குவாராக" என கௌரவ உபுல் மஹேந்திர ராஜபக்ஷ முன்மொழிய கௌரவ கிங்ஸ் நெல்சன் அதனை வழிமொழிந்தார்.

பிரேரணை சபைக்கு விடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டது.

(பி.ப. 4.28 மணிக்கு கௌரவ வேலு குமார் தலைமை தாங்கினார்.)

அப்போது பி.ப. 5.30 மணியாகிவிடவே இன்றைய தின சபைத் தீர்மானத்திற்கிணங்க தலைமை தாங்கும் உறுப்பினரால் பாராளுமன்றம் வினாவின்றி ஒத்திவைக்கப்பட்டது.

அதன்படி பாராளுமன்றம் 2022 யூன் 08 ஆம் திகதி புதன்கிழமை மு.ப. 10.00 மணிவரை ஒத்திவைக்கப்பட்டது.